# றிஸ்துவுக்கு விரோதமாக சாத்தான்



இலவசம்

இது விற்பனைக்குறியது அல்ல.

தொகுத்தவர்: வாட்சன் குட்மேன்

# சாத்தானுக்கு விரோதமாக கிறிஸ்து

''இவ்வுலகத்தின் அதிபதி'' என்று சாத்தான் வேதத்தில் குறிக்கப்பட்டுள்ளான். அவன் தேவனுக்கும், தேவனுடைய உயர்ந்த சிருஷ்டியான மனிதனுக்கும் பிரதான விரோதி. மனிதர்களாகிய நாம் தவிர்க்க இயலாத ஓர் யுத்த களத்தில் இழுக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் விரோதமாக யுத்தம் குமுறுகிறது. உம் சொந்த தளகர்த்தராக இவ்விருவரில் யார் இருப்பார் என்பதை நீர் தெரிந்துக்கொள்ள வேண்டும்.

''இம்மானுவேல்''—தேவன் நம்மோடு இருக்கிறார்—என்று அழைக்கப்படும் சிருஷ்டிக் கர்த்தாவாகிய கிறிஸ்துவா அல்லது எல்லா கலகத்திற்கும் தலைவனாக விளங்கும் சிருஷ்டிக்கப்பட்டவனாகிய சாத்தானா? தம்மில் உண்மையான விசுவாசம் வைக்கும் எல்லாருக்கும், கிறிஸ்து தம்முடைய சிலுவை மரணம், உயிர்தெழுதல் மூலமாக முழுமையான வெற்றியை சம்பாதித்துள்ளார்.

சாத்தான் பலவித முறைகளில் மனிதர்களை ஏமாற்றவும், தவறான வழிகளில் நடத்தவும் விழைகிறான். ஆராதனைக்குரியவர் யார் என்பதே முடிவான பிரச்சினை. நம் அனைவரையும் உருவாக்கின கிறிஸ்துவே எல்லா ஆராதனைக்கும் பாத்திரர் ஆவர். ஆராதிக்கப்படுகிறவரோடு நாம் நம்மை ஒன்றுப்படுத்துகிறோம். உலகமனைத்திலும் சாத்தான் மக்களை கவர்ச்சிக்கிற முறைகளாவன:

1. தேவனைவிட்டு சுயாதீனமாயிருத்தல்
2. பிசாசுகளுக்கு கீழ்படிதல்.
3. ''பாவ மனிதனை'' ஆராதித்தல்
4. அவனுடைய ''உருவத்தை'' ஆராதித்தல்.
5. அவனுடைய அடையாளத்தை உடலில் குறியிட்டுக் கொள்ளுதல்.

இவையாவற்றிற்கும் நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்.

— வாட்சன் குட்மேண்

All scriptures are taken from the Tamil Bible with permission from the Bible Society of India.

# விரோதி ஒருவனை தேவன் சிருஷ்டிக்கவில்லை

## பரலோகில் உன்னத நிலையில் இருக்கவே தேவன் லூசிபரை உருவாக்கினார்

கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன். நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப் பச்சை கோமேதகம், யஸ்பி, இந்திர நீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக் கொண்டிருக்கிறது. நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேளவாத்தியங்களும் உன் நாதசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது.

## தேவனுடைய சிங்காசனத்தினருகில் இருந்தான்

நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் வைத்தேன். அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய்.

## அவன் முழுமையாகவே உருவாக்கப்பட்டான்

நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டது மட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய்.

## தேவன் பாவத்தை அகற்றிவிட்டார்

உன் வியாபாரத்தின் மிகுதியினால், உன் கொடுமை அதிகரித்து நீ பாவஞ் செய்தாய்; ஆகையால் நான் உன்னை தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற, கேருபாய் இருந்த உன்னை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்து போடுவேன்.

—எசேக்கியேல் 28 : 12 - 16

## பாவம் செய்யும்படி லூசிபரை தூண்டியது என்ன?

நீதிமொழிகள் 16 : 18

அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மன மேட்டிமை.

எசேக்கியேல் 28 : 17 - 19

உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்; உன்னைத் தரையிலே தள்ளிப் போடுவேன்.

### எதிர்கலகம் தொடுக்கிறவனின் முடிவு

அக்கிரமங்களின் ஏராளத்தினாலும் உன் வியாபார அநீதத்தினாலும் உன் பரிசுத்த ஸ்தலங்களைப் பரிசுத்த குலைச்சலாக்கினாய்; ஆகையால் உன்னை பட்சிப்பதாகிய ஒரு அக்கினியை நான் உன் நடுவிலிருந்து புறப்படப் பண்ணி, உன்னைப் பார்க்கிற எல்லாருடைய கண்களுக்கு முன்பாகவும் உன்னைப் பூமியின்மேல் சாம்பலாக்குவேன். ஜனங்களில் உன்னை அறிந்த அனைவரும் உன்னிமித்தம் திகைப்பார்கள்; மகா பயங்கரமாவாய்; இனி ஒரு போதும் இருக்கமாட்டாய் என்று உரைக்கிறார்.

### உருவாக்கப்பட்டவை உருவாக்கினவருக்கு அடங்கியிருக்க வேண்டும்

சங்கீதம் 100 : 2, 3

கர்த்தரே தேவனென்று அறியுங்கள்: நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார். நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்.

# லூசிபர் விடுத்த விடுதலை அறிவிப்பு

## அவன் சித்தம் தெய்வ சித்தத்திற்கு விரோதமானது

ஏசாயா 14 : 12–19

நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப் படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே! நான் வானத்துக்கு ஏறுவேன். தேவனுடைய நட்சத் திரங்களுக்கு முன்பா என் சிங்காசனத்தை உயர்த்து வேன், வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங் களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னத மானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே.

## அது பூமியில் அழிவை வருவிக்கிறது

ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போனாய், உன்னைக் காண்கிறவர்கள், இவன்தானா பூமியை தத்தளிக்கவும் ராஜ்யங்களை அதிரவும் செய்து, உலகத்தை வனாந்தரமாக்கி, அதின் நகரங்களை அழித்து, சிறைப்பட்டவர்களைத் தங்கள் வீடுகளுக்குப் போகவிடாமலிருந்தவன் என்பார்கள்.

## அவன் தேவனுக்கு அருவருப்பானவன்

ஜாதிகளுடைய சகல ராஜாக்களும், அவரவர் தங்கள் அறையிலே மகிமையோடே கிடத்தப்பட்டிருக் கிறார்கள். நீயோ அழுகிப் போன கிளையைப் போல வும், பட்டயக் குத்தால் கொலையுண்டவர்களின் உடுப் பைப் போலவும், ஒரு குழியின் கற்களுக்குள்ளே கிடக்கிற வர்களைப் போலவும் உன் கல்லறைக்கு புறம்பாய் எறிந்து விடப்பட்டாய்.

# தேவனைச் சாராது சுயேட்சையை நாடுதல் அழிவை வருவிக்கும்

## இது லூசிபரில் துவங்கிற்று

லூக்கா 10:18

சாத்தான் மின்னலைப் போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்.

## சாத்தானை பின்பற்றின தூதர்களில் தொடர்ந்தது

2. பேதுரு 2:4

பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத் தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக் கொடுத்தார்.

## சாத்தானால் வஞ்சிக்கப்பட்ட மனிதனுக்கும் வந்தது

1. தீமோத்தேயு 3:6

அவன் இறுமாப்படைந்து பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது.

## சாத்தான் மனிதன்மேல் ஆளுகை கொள்கிறான்

2. பேதுரு 2:19

எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே.

## தேவனுடைய முழுமையான சித்தம் ஒன்றையே மேலுலகம் கொண்டிருக்க வேண்டும்

ரோமர் 12:2

நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

# சகல ஆராதனைகளுக்கும் உரியவர் தேவன் ஒருவரே

உபாகமம் 5:6, 7

உன் தேவனாகிய கர்த்தர் நானே, என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

1 நாளாகமம் 16:29

கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டுவந்து அவருடைய சந்நிதியில் பிரவேசியுங்கள். பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்.

மத்தேயு 4:10

அப்பொழுது இயேசு ''அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே'' என்றார்.

வெளி 19:10

அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி, இப்படிச் செய்யாதபடிக்குப் பார். உன்னோடும் இயேசுவைக் குறித்து சாட்சியிட்ட உன் சகோதரரோடுங் கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுக்கொள்.

சங்கீதம் 95:6

நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்.

## வஞ்சிக்கப்பட்டவர் துரோகியை ஆராதிப்பர்

வெளி 13 : 3, 4

பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி, அந்த மிருகத்திற்கு அப்படிப் பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள்.

# தேவனுக்கு எதிராளியானவர்களை ஆராதிக்கக் கூடாது

## சாத்தானும், பிசாசுகளும் தாங்கள் ஆராதிக்கப் படுவதை பெரிதும் விரும்புகின்றன

மத்தேயு 4:8, 9

பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல இராஜ்யங்களையும், அவைகளின் மகிமையையும் அவருக்கு காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்கு தருவேன் என்று சொன்னான்.

வெளி 9:20

அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனிதர்கள் பேய்களையும், பொன், வெள்ளி, செம்பு, கல் என்பவைகளால் செய்யப்பட்டவைகளையும் காணவும் கேட்கவும் நடக்கவுமாட்டாதவைகளுமாயிருக்கிற விக்கிரகங்களையும் வணங்காதபடிக்குத் தங்கள் கைகளின் கிரியைகளை விட்டு மனந் திரும்பவுமில்லை.

## இவ்விதம் தொழுகிறவர்களை தேவன் அழித்து விடுவார்

வெளி 16:2, 20:13, 14

மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனிதர்கள் யாவரும் தாங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத் தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்.

ஏசாயா 42:8

நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்.

# கிறிஸ்துவின் தூதர்களும், சாத்தானின் தூதர்களும்

**தேவனின் தூதர்கள், விழுந்துப் போன சாத்தானின் தூதர்களைக் காட்டிலும் பலசாலிகள்**

சங்கீதம் 103:20

கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்தரியுங்கள்

வெளி 12:7

வானத்திலே யுத்தம் உண்டாயிற்று. வலுசர்ப்பமும் அதைச் சேர்த்த தூதரும் யுத்தம் பண்ணியும் ஜெயங் கொள்ளவில்லை.

**தேவனுடைய தூய தூதர்கள் கர்த்தருடைய மக்களைப் பாதுகாத்து, அவர்களுக்கு ஊழியம் செய்கின்றன**

இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித் தமாக உழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார் களல்லவா? எபிரேயர் 1:14

உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார். சங்கீதம் 91:11

**விழுந்துப்போன தூதர்கள் (பிசாசுகள், ஆவிகள்) மனிதர்களை நரகத்திற்கு கொண்டு செல்ல உறுதிக் கொண்டுள்ளன**

தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக் கொண்டு வந்தது .. லூக்கா 11:26

1 தீமோத்தேயு 4:1

பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய் யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசு வாசத்தை விட்டு விலகிப்போனார்கள்.

## எவரை, எவைகளை சாத்தான் அதிகமாக வெறுக்கிறான்

### தேவ சாயலில் உருவாக்கப்பட்ட மனிதனை

*லூக்கா 9:42*

*பிசாசு அவனைக் கீழே தள்ளி, அலைக் கழித்தது. இயேசு அந்த அசுத்த ஆவியை அதட்டி, இளைஞனைக் குணமாக்கினார்.*

### தேவ ஆசீர்வாதம் பெற்ற குடும்பங்களை

*ஆதி 12:3*

*உன்னை சபிக்கிறவர்களைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப் படும்.*

### மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனாகிய கிறிஸ்துவை

*மத்தேயு 2:16*

*அப்பொழுது ஏரோது தான்...... வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு... ஆட்களை அனுப்பி திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுகுட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலை செய்தான்.*

### தேவனுடைய வார்த்தையை (சாத்தானுக்கு அது முரணானது)

*தேவன் சொன்னது உண்டோ?... அப்போது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி; நீங்கள் சாகவே சாவதில்லை.*

### தேவன் தெரிந்து கொண்ட தேசமாகிய இஸ்ரவேலை

*வெளி. 12:13*

*வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து அந்த ஆண் பிள்ளையைப் பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது.*

### தூய ஆவியினால் மறுபடி பிறந்த விசுவாசிகளை

*1 பேதுரு 5:8*

*உங்கள் எதிராளியாகிய பிசாசானவன்... எவனை விழுங் கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான்.*

**தனக்குரியவர்கள் மேல் போலி அடையாளமிடுகிறான்**

தேவனுடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமூகத்தை தரிசிப்பார்கள். அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். வெளி 22:3, 4

(சாத்தானின் வேஷம் 35 ம் பக்கம் காண்க)

**பொய்களால் சுவிசேஷத்தை புறட்டுகிறான்**

கலாத்தியா 1:6, 7

உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல.

**தேவ ஊழியர்கள் போல் நடிக்கிறான்**

2 கொரிந்தியர் 11:13, 14

அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே.

(2 தெசலோ 2:9; வெளி 13:14; 19:20 காண்க)

தம்மை உண்மையாய் ஆராதிக்கிறவர்களை கிறிஸ்து ஆட்கொள்வது போலவே சாத்தான் தன்னையும் தான் உருவாக்கின கடவுள்களையும் ஆராதிக்கிறவர்களை ஆண்டு கொள்ளுகிறான்.

ஏசாயா 26:13

எங்கள் தேவனாகிய கர்த்தாவே, உம்மையல்லாமல் வேறே ஆண்டவன்மார் எங்களை ஆண்டார்கள்.

## விக்கிரகங்களுக்கு உங்களை விலக்கிக் கொள்ளுங்கள்

நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக் கொள்வீர்களாக. 1 யோவான் 5:21

யாத்திராகமம் 20:3-5

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம், மேலே வானத்திலும் கீழே பூமியிலும், பூமியின் கீழ்த்தண்ணீரிலும் இருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்

## பிற தேவர்களை தேவன் அறுவருக்கிறார் — நரபலி தேவனால் தடை செய்யப்பட்டுள்ளது

உபாகமம் 12:2, 30, 31

ஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்த உயர்த்த மலைகளின் மேலும் மேடுகளின் மேலும், பச்சையான சகல மரங்களின் கீழுமுள்ள இடங்களையெல்லாம் முற்றிலும் அழித்து விடக்கடவீர்கள்... நீ அவர்களைப் பின்பற்றிச் சிக்கிக்கொள்ளாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. உன் தேவனாகிய கர்த்தருக்கு அப்படிச் செய்யாயாக; கர்த்தர் வெறுக்கிற அருவருப்பான யாவையும் அவர்கள் தங்கள் தேவர்களுக்குச் செய்து தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும், தங்கள் தேவர்களுக்கு அக்கினியிலே சுட்டெரித்தார்களே.

மீகா 6:7

... என் ஆத்துமாவின் பாவத்தைப் போக்க என் கர்ப்பக் கனியையும் கொடுக்க வேண்டுமோ?

( கிறிஸ்துவின் இரத்தமே பாவங்களை நீக்கி சுத்திகரிக்கும். )

# விக்கிரக ஆராதனை

## விக்கிரக ஆராதனையின் தவறு

ரோமர் 1:25

தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள்; அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

சங்கீதம் 115:3-8

நம்முடைய தேவன் பரலோகத்திலிருக்கிறார்; தமக்கு சித்தமானயாவையும் செய்கிறார். அவர்களுடை விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் போசாது; அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது. அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது; அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது. அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது; அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது. தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது; அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப் போலவே இருக்கிறார்கள்.

## விக்கிரக ஆராதனை பிசாசின் ஆராதனையே

... விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள்... அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை. 1 கொரிந்தியர் 10:14. 20

## விக்கிரக ஆராதனைக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனை

விக்கிரகாராதனைக்காரரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள். வெளி 21:8

# விக்கிரக (பிசாசின்) ஆராதனையை தேவன் வெறுக்கிறார்

**விக்கிரகங்கள் நிமித்தம் தேவன் தேசங்களை அழித்தார். உன் வீட்டில் விக்கிரகங்கள் இருக்க வேண்டாம்**

உபாகமம் 7:24-26

அவர்களுடைய இராஜாக்களை உன் கையில் ஒப்புக் கொடுப்பார்; அவர்கள் பெயர் வானத்தின் கீழ் இராதபடிக்கு அவர்களைச் சங்கரிக்கக்கடவாய்; அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை அக்கினியினால் சுட்டெரிக்கக் கடவாய்... அவைகள் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள். அவைகளைப்போல நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டு போகாயாக.

**தேவன் தெரிந்துகொண்ட இஸ்ரவேல் தேசத்திலும் இயேசு கிறிஸ்துவின் ஊழிய நாட்களில் பிசாசு பிடித்தவர்கள் அநேகர் இருக்க காரணம் என்ன? அவர்களுடைய முன்னோர் பிசாசை ஆராதித்ததினாலேயே**

அவர்களுடைய விக்கிரகங்களைச் சேவித்தார்கள். அவைகள் அவர்களுக்குக் கண்ணியாயிற்று. அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் பிசாசுகளுக்கு பலியிட்டார்கள். அதினால் கர்த்தருடைய கோபம் தமது ஜனத்தின் மேல் மூண்டது. சங்கீதம் 106:36,37,40

நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். யாத்திராகமம் 20:5

# எல்லாவித பில்லிசூனியங்களும் பாவமாகும்

யாத்திராகமம் 22:18, மீகா 5:12

சூனியக்காரியை உயிரோடே வைக்கவேண்டாம். சூனிய வித்தைகள் உன் கையில் இராதபடிக்கு அகற்று வேன்; நாள் பார்க்கிறவர்கள் உன்னிடத்தில் இல்லாமற் போவார்கள்.

1 சாமுவேல் 15:23

இரண்டகம் பண்ணுதல் பில்லி சூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரக ஆரா தனைக்கும் சரியாய் இருக்கிறது.

உபாகமம் 18:9-12

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேரும்போது, அந்த ஜாதிகள் செய்யும் அருவருப்புகளின்படி செய்யக்கற்றுக் கொள்ள வேண்டாம். தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப் பண்ணுகிறவனும், குறி சொல்லுகிறவனும், நாள் பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனி யக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாய வித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறி கேட்கிற வனும் (மையிட்டு பார்க்கிறவனும்) உங்களுக்குள்ளே இருக்க வேண்டாம். இப்படிப்பட்டவைகளை செய் கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்.

## பிசாசின் ஒத்தாசையோடு, முன்னறிவித்தல்- குறிச்சொல்லுதல்

**ஜோதிடம், சூனியம், நிமித்தம் பார்த்தல் உடலைக் கீரிக்கொள்ளுதல் பச்சைக் குத்துதல் ஆகியவைகளை தேவன் தடை செய்கிறார்**

லேவியராகமம் 19:26, 28

யாதொன்றையும் இரத்தத்துடன் புசிக்க வேண்டாம். குறிகேளாமலும், நாள் பாராமலும் இருப்பீர்களாக. செத்தவனுக்காக உங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்ளாமலும், அடையாளமான எழுத்துக்களை உங்கள்மேல் குத்திக்கொள்ளாமலும் இருப்பீர்களாக; நான் கர்த்தர்.

எரேமியா 27:9

உங்கள் தீர்க்கதரிசிகளுக்கும், உங்கள் குறிகாரருக்கும், உங்கள் சொப்பனக்காரருக்கும், உங்கள் நாட்பார்க்கிறவர்களுக்கும், உங்கள் சூனியக்காரருக்கும் நீங்கள் செவிகொடாதிருங்கள்.

சகரியா 10:2

சுரூபங்கள் அபத்தமானதைச் சொல்லிற்று; குறிசொல்லுகிறவர்கள் பொய்யைத் தரித்தார்கள். சொப்பனக்காரர் வீணானதைச்சொல்லி வியர்த்தமாகத் தேற்றரவு பண்ணினார்கள். ஆகையால் ஜனங்கள் ஆடுகளை போலச் சிதறி மேய்ப்பனியில்லாததினால் சிறுமைப் பட்டார்கள்.

**உண்மை மேய்ப்பனை நம்பி ஒப்புக்கொடு**

இயேசு சொன்னார், ''உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.'' யோவான் 14:1

# எல்லாவகையான குறிச்சொல்லுதலையும் விட்டு விடு

## ஆவிகள் மூலம் குறிச்சொல்லுதல்

அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணு என்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும்போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்க வேண்டியதல்லவோ? ஏசாயா 8:19

## உடற்கூறுகள், உருவங்கள் மூலம் குறிச்சொல்லுதல்

பாபிலோன் ராஜா இரண்டு வழிகளின் முனையாக வழிப்பிரிவிலே நிமித்தம் பார்க்கிறதற்காக நிற்பான்; அம்புகளைத் தீட்டி, விக்கிரகங்களை உசாவி, ஈரலால் குறி பார்ப்பான். எசேக்கியல் 21:21

## கோல் கொண்டு குறிச் சொல்லுதல்

என் ஜனங்கள் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள், அவர்களுடைய கோல் அவர்களுக்குச் செய்தியை அறிவிக்குமென்றிருக்கிறார்கள்; வேசித்தன ஆவி அவர்களை வழிதப்பித் திரியப் பண்ணிற்று; அவர்கள் தங்கள் தேவனுக்கு கீழ்ப்பட்டிராமல் சோரமார்க்கம் போனார்கள். ஓசியா 4:12

## குறிசொல்லுதல், அஞ்சனம் பார்த்தலுக்கு வரும் தண்டனை

1 நாளாகமம் 10:13 மீகா 3:7

சவுல் கர்த்தருடைய வார்த்தையைக் கைகொள்ளாமல் கர்த்தருக்குச் செய்த தன் துரோகத்தினிமித்தமும், அவன் கர்த்தரைத் தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களைக்கேட்கும்படிக்குத் தேடினதினிமித்தமும் செத்துப் போனான். தரிசனம் பார்க்கிறவர்கள் வெட்கி, குறி சொல்லுகிறவர்கள் நாணி, உத்தரவு கொடுக்கிற தேவன் இல்லாததினால் அவர்கள் எல்லாரும் தங்கள் வாயை மூடுவார்கள்.

## புறஜாதிமக்கள் ஜோதிடத்தை பின்பற்றுகின்றனர்

புற ஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக் கொள்ளாதிருங்கள்; வானத்தின் அடையாளங்களாலே புற ஜாதிகள் கலங்குகிறார்கள். எரேமியா 10:2

அதிர்ஷ்ட எழுத்துக்கள், எண்கள், பொருள்கள் என்று அவைகள்மேல் சாராதே. பேய்தனமான பாடல்கள், தீய படங்களுக்கு உன்னை ஒப்புக்கொடாதே. தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்கமாட்டேன். (சங்கீதம் 101:3) பொறாமை, மாய்மாலம், செத்த மதங்கள் இவை களைக் கைவிடு.

மாயக்காரரே.... உங்களுக்கு ஐயோ... அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும். உள்ளேயோ... அசுத்தத்தினால் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப் படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத் தினாலும் நிறைந்து இருக்கிறீர்கள்''. மத்தேயு 23:27, 28

## தற்கொலை பிசாசிடமிருந்து வருகிறது

உன்னையே நீ மாய்த்துக் கொள்வதினால் பிரச் சனைகளிலிருந்தும், குற்ற உணர்விலிருந்தும் விடுதலை பெறுவாய் என்று பிசாசு கொடுக்கும் பொய்யான ஆலோ சனைகளுக்கு நீ செவி கொடாதே.

''கொலை செய்யாதிருப்பாயாக'' யாத்திராகமம் 20:13

## கிறிஸ்து ஒருவரே குற்ற மனசாட்சியிலிருந்து விடு தலை தருகிறார்

(48, 49-ம் பக்கங்கள் காண்க)

கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர். அவர் எனக்கு இரட்சிப்புமானவர்; அவரே என் தேவன். அவரை உயர்த்துவேன். யாத்திராகமம் 15:2

# சாத்தான் தரும் செய்திகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்

## கள்ள தீர்க்கர்கள் மூலம்

எரேமியா 14:14, மாற்கு 13:22

என் நாமத்தைக் கொண்டு பொய்யாய்த் தீர்க்க தரிசனஞ் சொல்லுகிறார்கள். நான் அவர்களை அனுப்பினதுமில்லை. அவர்களுக்கு கற்பித்ததுமில்லை அவர்கள் கள்ள சகுனத்தையும், இல்லாத விசேஷத்தையும் தங்கள் இருதயத்தின் கபடத்தையுமே, உங்களுக்குத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள். கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ள தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையும், செய்வார்கள்.

## மரித்தவர்களோடும் அசுத்த ஆவிகளோடும் பேசுவதின் மூலம்

கிறிஸ்துவின் நாமத்தில் கண்டித்து, ஓடிப்போகும்படி உத்திரவு இடுவதைத் தவிர தீய ஆவிகளோடு பேச வேண்டாம். இரேகைப் பார்த்தல், மையிடுதல், மந்திரங்கள் இவைகளில் நம்பிக்கை வைக்க வேண்டாம். ''ஜெயமோ கர்த்தரால் வரும்'' நீதி 21:31

## சாத்தானின் புத்தகங்களையும், விக்கிரகங்களையும் அழித்துப் போடுங்கள்

மாயவித்தைத்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புத்தகங்களைக் கொண்டு வந்து. எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகை பார்த்து ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள். கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது. அப்போஸ்தலர் 19: 19, 20 (ஆதி 35:2–5 காண்க.)

# கிறிஸ்து பாலுறவை உண்டாக்கினார் சாத்தான் அதைப் புரட்டிப்போட்டான்

## தாம்பத்திய வாழ்கைக்காகவே பாலுறவு

தேவனாகிய கர்த்தர் மனிதனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கினார். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம் சமாயிருப்பார்கள். ஆதியாகமம் 2:22, 24

விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக. வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந் தீர்ப்பார். எபிரேயர் 13:4

விபசாக்காரனாவது அசுத்தனாவது... தேவனுடைய இராஜ்யத்திலே சுதந்திரமடைவதில்லை யென்று அறிந் திருக்கிறீர்களே. எபேசியர் 5:5

விவாகம் பண்ணிக் கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது; மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்து போகக்கூடாது. பிரிந்து போனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள், அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள். புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது. 1 கொரிந்தியர் 7:10, 11

(ரோமர் 7:2, மாற்கு 10:9 காண்க.)

## கீழ்ப்படியாமைக்கு பின்னாக சாத்தான் இருக்கிறான் 1 யோவான் 3:8

பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்.

## கீழ்ப்படிகிறவருக்கே நீ சொந்தம்

...எதற்குக் கீழ்ப்படியும் படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமை களாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? ரோமர் 6:16

## விபசாரமும், காமவிகாரமும் தேவனுக்கு விரோதமான பகை

யாத்திராகமம் 20:14

விபசாரம் செய்யாதிருப்பாயாக

1 தெசலோனிக்கேயர் 4:3

நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருங்கள்

லேவியராகமம் 20:10

ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபசாரம் செய்தால். பிறன் மனைவியோடே விபசாரம் செய்த அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொலை செய்யப் படக் கடவர்கள்.

### இது சொந்த சரீரத்திற்கு விரோதமான பாவம்

1 கொரிந்தியர் 6:13, 15, 18

சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்... உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர் களா?... வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனிதன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும், வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ் செய்கிறான்.

### பெற்றோர்கள் பாலுறவு பாவங்களிலிருந்து தம் பிள்ளை களை காக்க வேண்டும்

தேசத்தார் வேசித்தனம் பண்ணி தேசமெங்கும் முறைகேடான பாவம் நிறையாதபடிக்கு உன் குமாரத் தியை வேசித்தனம் பண்ண விடுகிறதினாலே பரிசுத்தக் குலைச்சலாக்காயாக. லேவியராகமம் 19:29

# கிறிஸ்துவின் மரணத்தினால் சாத்தான் தோற்கடிக்கப்பட்டான்

1 கொரிந்தியர் 15:22

ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

எபிரேயர் 5: 14, 15

பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும் படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத் தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்.

பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். 1 யோவான் 3:8.

துரைத் தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துக் கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார். கொலோசெயர் 2:15

## கிறிஸ்துவில் நமக்கு அழியாமையும் ஜீவனும் கிடைக்கிறது

2 தீமோத்தேயு 1: 9, 10

அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின் படியும், ஆதிகால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியும், நம்மை இரட்சித்தார்; இரட்சகராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது. அவர் மரணத்தைப் பரிகரித்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்.

# சாத்தான் மேல் கிறிஸ்தவனின் வெற்றி

## 1 பேதுரு 5: 8, 9

ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்.

## எபேசியர் 6:11-18

நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையிலே கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின்... ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலை சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். எந்த சமயத்திலும் .... ஆவியினாலே ஜெபம் பண்ணி .... விழித்துக் கொண்டிருங்கள்.

## யாக்கோபு 4:7 யோவான் 4:4

ஆகையால் தேவனுக்கு கீழ்ப் படிந்திருங்கள். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்போது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்.

ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் (சாத்தான்) உங்களிலிருக்கிறவர் (கிறிஸ்து) பெரியவர்.

**அவரே தேவனுடைய குரல் :** எபிரேயர் 1: 1, 2

தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.

அவர் வேதபாரகரைப் போல போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்த படியினால், அவருடைய போதகத்தைக் குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். மாற்கு 1:22

பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது; அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம். 1 கொரிந்தியர் 6:8

அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால். நியாயத் தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். யோவான் 5:27

அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்; தேவ தூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்கு கீழ்ப் பட்டிருக்கிறது. 1 பேதுரு 3:22

கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார். ரோமர் 14:9

இயேசு அவர்களை நோக்கி, ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது'' என்றார். மத்தேயு 28:18

# கிறிஸ்து அதிகாரத்துடனே பேசினார், அதிகாரத்துடன் கிரியை நடப்பித்தார்

## கிறிஸ்து அதிகாரத்தோடு காற்றை அதட்டினார்

மாற்கு 4:39

அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப் பார்த்து, இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்று, மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

## கிறிஸ்து அதிகாரத்தோடு சுகப்படுத்தினார்

மாற்கு 2:10-12

''பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும்'' என்று இயேசு சொல்லி, திமிர் வாதக்காரனை நோக்கி ''நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்கு போ என்று சொல்லுகிறேன்'' என்றார். உடனே அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, எல்லாருக்கு முன்பாகப் போனான்.

## கிறிஸ்து அதிகாரத்துடன் பிசாசுகளை துரத்தினார்

உடனே அந்த அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து மிகுந்த சத்தமிட்டு, அவனை விட்டுப் போய் விட்டது. எல்லாரும் ஆச்சரியப்பட்டு; இது என்ன? இந்தப் புதிய உபதேசம் எப்படிப்பட்டது? இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார். அவைகள் இவருக்குக் கீழ்படிகிறதே என்று சொல்லிக்கொண்டார்கள். மாற்கு 1:26, 27

## அவர் மரித்தவர்களையும் அதிகாரத்தோடே உயிரோடு எழுப்பினார்

இயேசு ''வாலிபனே, எழுந்திரு என்று உனக்கு சொல்லுகிறேன்'' என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத்தொடங்கினான். லூக்கா 7: 14, 15

# கிறிஸ்து தம் அடியவர்களுக்கு விரோதியின் பெலத்தை மேற்கொள்ளும் சகல வல்லமையையும் கொடுக்கிறார்

லூக்கா 10:19

இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்.

லூக்கா 9:1

அவர் தம்முடைய பன்னிரண்டு சீடர்களையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும், அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார்.

யோவான் 14:12

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத்தானும் செய்வான்.

மாற்கு 9:23

இயேசு அவனை நோக்கி; நீ விசுவாசிக்க கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்.

எபேசியர் 1:19

தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்க வேண்டும்.

# அசுத்த ஆவிகளை துரத்துவது

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதட்டி கட்டளை யிட்டார்**

மாற்கு 5: 8, 9, 13

ஏனெனில், அவர் அவனை நோக்கி; அசுத்த ஆவியே இந்த மனிதனை விட்டுப் புறப்பட்டுப்போ என்று சொல்லியிருந்தார்.... அசுத்த ஆவிகள் புறப் பட்டுப் பன்றிகளுக்குள் போயின...

மாற்கு 9:25-27, 29

... இயேசு அந்த அசுத்த ஆவியை நோக்கி; ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப் புறப்பட்டுப்போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்கு கட்டளையிடுகிறேன் என்று அதை அதட்டினார். அப்பொழுது அது சத்தமிட்டு, அவனை மிகவும் அலைக் கழித்துப் புறப்பட்டுப் போயிற்று. அவன் செத்துப்போனான் என்று அநேகர் சொல்லத்தக் கதாகச் செத்தவன் போல் கிடந்தான். இயேசு அவன் கையைப் பிடித்து, அவனைத் தூக்கினார்; உடனே அவன் எழுந்திருந்தான்.

... இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத் தினாலுமேயன்றி ... புறப்பட்டுப் போகாது என்றார்.

அப்போஸ்தலர் 16:18

பவுல்... திரும்பிப் பார்த்து; நீ இவனை விட்டுப் புறப்படும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று.

லூக்கா 4:35

அதற்கு இயேசு; நீ பேசாமல் இவனை விட்டுப்புறப் பட்டுப் போ என்று அதை அதட்டினார். அப்பொழுது பிசாசு அவனை ஜனங்களின் நடுவே விழத்தள்ளி, அவனுக்கு ஒரு சேதமுஞ் செய்யாமல் அவனை விட்டுப் போய்விட்டது.

# கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எல்லாவற்றிற்கும் மேலான, உயர்த்தப்பட்ட, மேன்மையான நாமம்

தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால்யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும் படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். பிலிப்பியர் 2:9,10

நீங்கள் என் நாமத்தினால் எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும் படியாக அதைச் செய்வேன். யோவான் 14:13

என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்யும்படிக்கு நான் என் குடும்பத்துடன் ஆப்பிரிக்காவுக்கு சென்றிருந்த பொழுது ஓர் நாள் இரவு. கொடூரமான ஒரு அசுத்த ஆவி என் மேல் இருக்க நான் விழித்துக் கொண்டேன். இது வெறும் பீதியா, அல்லது உண்மைதானா என்று அறியும்படி என் முட்டியை அதன் மேல் உயர்த்தினபோது, அது மிகுந்த சக்தியோடு என்னை தள்ளி மிக வேகமாக என் கழுத்தை நெறிக்கும் படி பாய்ந்தது. அப்பொழுது ‘‘கிறிஸ்து இயேசுவே உதவி செய்யும்’’ என்று கூப்பிடும்படியான ஒரு வினாடி நேரம் மட்டுமே எனக்கு கிடைத்தது. நான் இவ்விதமாக கூவின உடனே அது என்னை விட்டு ஓடிவிட்டது. கடந்த 28 ஆண்டுகளாக இதைப் போன்ற ஒரு அனுபவம் மறுபடியும் எனக்கு ஏற்படவில்லை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையான, புனித நாமத்திலே பிசாசின் மேலும் அசுத்த ஆவிகள் மேலும் மாபெரும் வெற்றி நமக்கு உண்டு. இரட்சிப்புக்காகவும், விடுதலைக்காகவும் இந்த பெயரையே சொல்லிக் கூப்பிட்டு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தொழுதுக்கொள். -வாட்சன்குட்மென்

# கர்த்தராகிய இயேசு கிறிஸ்து முழு அதிகாரம் பெற்ற நாமம்.

## ஆத்தும இரட்சிப்பு நல்கும் நாமம்

*ரோமர் 10:13*

*ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.*

*உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு (முக்தி) இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனிதர்களுக்குள்ளே, அவருடைய (இயேசுகிறிஸ்து) நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. அப்போஸ்தலர் 4:11, 12.*

## பாவ மன்னிப்பு அருளும் நாமம்

*லூக்கா 24:47*

*அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது.*

## சரீர சுகம் நல்கும் நாமம்

*அப்போஸ்தலர் 3:16*

*அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே, அவருடைய (இயேசுகிறிஸ்துவின்) நாமமே… இவனைப் பெலப்படுத்தினது.*

## தேவ தூதர்களிலும் உயர்த்தப்பட்ட நாமம்.

*இவர் (குமாரனாகிய இயேசுகிறிஸ்து) தேவதூதரைப் பார்க்கிலும் எவ்வளவு சிறப்பான நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ அவ்வளவு அதிகமாக அவர்களிலும் மேன்மையுள்ளவரானார். எபிரெயர் 1:4*

# கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் உள்ள வித்தியாசங்கள்

**கிறிஸ்து சிருஷ்டிக்கர்த்தர், தேவன்**

ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும் சிங்காசனங்களானாலும். கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும். அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும்சிருஷ்டிக்கப்பட்டது. கொலோசெயர் 1:16

**கிறிஸ்து ஒளியையும் சமாதானத்தையும் அருளுகிறார்**
லூக்கா 1:79

நம்முடைய கால்களை சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அல்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது.

சமாதானத்தின் கர்த்தர் தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும் உங்களுக்கு சமாதானத்தைத் தந்தருளுவாராக. 2 தெசலோனிக்கேயர் 3:16

**சாத்தானும், பிசாசுகளும் அழிவுக்குக் காரணமான வர்கள்**

திருடன் (சாத்தான்) திருடவும் கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறோன்றுக்கும் வரான்.

பிசாசானவன் தனக்கு கொஞ்சக் காலம் மாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்து வரும். யோவான் 10:10 வெளி 12:12

**சாத்தான் இருளையும், வேதனையையும் தருகிறான்**

துன்மார்க்கருடைய பாதையோ காரிருளைப்போலிருக்கும்;. தாங்கள் இடறுவது இன்னதில் என்று அறியார்கள். நீதிமொழிகள் 4:19

ஐசுரியவானும் மரித்து அடக்கம் பண்ணப் பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப் படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தான். லூக்கா 16:22, 23

# கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் உள்ள வித்தியாசங்கள்

## கிறிஸ்துவே சத்தியம்

அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.... நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீடராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும். யோவான் 1:14. 8:31, 32

## கிறிஸ்து அன்பு நிறைந்தவர்

அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம். 1 யோவான் 3:16

## சாத்தான் பொய்க்கு தகப்பன்

யோவான் 8:44

நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின் படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற் கொண்டு மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.

## சாத்தான் விரோதத்தை ஏவிவிடுகிறவன்

உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னை பகைத்ததென்று அறியுங்கள். யோவான் 15:18

மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன.... பகைகள்... கோபங்கள். கலாத்தியர் 5:19,20

# கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் உள்ள வித்தியாசங்கள்

**கிறிஸ்து ஆத்துமாவைச் சுத்திகரிக்கிறார்**

1 யோவான் 1:7

அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.

**கிறிஸ்து பாவத்திலிருந்து விடுதலை தருகிறார்**

இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கபடுவது அதிக நிச்சயமாமே. ரோமர் 5:9

**கிறிஸ்து நித்திய ஜீவன் தருகிறார்**

ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். யோவான் 17:3

**சாத்தான் ஆத்துமாவை தீட்டுப் படுத்துகிறான்**

கலாத்தியர் 6:7, 8

மோசம் போகாதிருங்கள், தேவன் நம்மை பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்.

**சாத்தான் பாவத்தில் சிக்கவைக்கிறான்**

பாவஞ் செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏன்னெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ் செய்கிறான். 1 யோவன் 3:8

**சாத்தான் நித்திய மரணத்திற்கு அழைத்து செல்கிறான்**

....களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்; அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு;... களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிப்பார். மத்தேயு 13:38-40

# சாத்தானும் உலக ஆதிக்கமும்

## இப்பொழுது சாத்தான் உலகத்தின் அதிபதி

யோவான் 14:30

இனி நான் (இயேசுகிறிஸ்து) உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.

**சாத்தான் அதிபதியாக இருக்கிறான். தீமைகளுக்கும் சீர்குலைத்தலுக்கும் அவனே பொருப்பாளி**

இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு. யாக்கோபு 3:15, 16

(கிறிஸ்துவை வெளியரங்கமாக ஆராதிக்கக்கூடிய உரிமையை கூடுமானால் சாத்தான் குலைப்பான். ஆனால் இருதய ஆழத்திலிருந்து எழும்பும் அன்பின் ஆராதனையை அவனால் அழிக்க இயலாது. நீ உன் விசுவாசத்தைக் காத்துக்கொள்.)

**மரண பரியந்தம் கிறிஸ்துவுக்கு உண்மையாயிரு**

கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ முழங்காற்படியிட்டு; ஆண்டவரே இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டு சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்.

**கிறிஸ்துவின் உலக ஆட்சி**

தாவீதின் சிங்காசனத்தையும், அவன் இராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இது முதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப் படுத்துவார். அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதன் சமாதானத்துக்கும் முடிவில்லை. ஏசாயா 9:7

## அந்திக் கிறிஸ்து - வரும் உலக அதிபதி
## சாத்தானின் முழு அதிகாரம் பெற்ற பாவ மனிதன்
2 தெசலோனிக்கேயர் 2:1, 3, 4, 8-9

சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கபடுவதையுங் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக் கொள்கிறது என்னவென்றால்,... எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. அவன் எதிர்த்து நிற்ககிறவனாயும், தேவனென்னப்படுவதெதுதோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்... நீக்கப்படும் போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும், அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும் நடக்கும்.

...வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது... ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும் பாஷைக்காரர் மேலும் ஜாதிகள் மேலும் அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. வெளி 13:3, 7

அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங் கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும் மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம் பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி மிருகத்தையும் வணங்கினார்கள். வெளி 13:4

# அந்திக் கிறிஸ்து பரிசுத்தவான்களோடு போரிடுவான்

## தானியேல் 7:25, 26

உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை, ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான். அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக் கொடுக்க படுவார்கள். ஆனாலும் நியாய சங்கம் உட்காரும்; அப்பொழுது முடிவுபரியந்தம் அவனை சங்கரிக்கும்படியாகவும் அழிக்கும்படியாகவும், அவனுடைய ஆளுகையை நீக்கிப்போடுவார்கள்.

... அல்லாமலும், நாற்பத்திரண்டு மாதம் யுத்தம் பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. அது தேவனைத் தூஷிக்கும்படி தன் வாயைத் திறந்து, அவருடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷித்து, மேலும் பரிசுத்தவான்களோடே யுத்தம் பண்ணி, அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது மல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும், பாஷைக்காரர் மேலும் ஜாதிகள் மேலும் அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. உலகத் தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள். காதுள்ளவனெவனோ அவன் கேட்கக் கடவன். வெளி 13:5-9

விசுவாசுத்தின் நல்லப் போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய். 1 தீமோத்தேயு 6:12

# அந்திக் கிறிஸ்துவின் சொரூபத்தை ஒரு போதும் ஆராதனை செய்யாதே

## அந்திக் கிறிஸ்து உலகை ஏமாற்ற உலக மதத்தலைவர்கள் அவனுக்கு உதவி செய்வார்கள்

வெளி 14,15: 19:20

மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம் போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டுத் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று. மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யத்தக்கதாகவும் மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங் கொடுக்கப்பட்டது... அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம் போக்கின. கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப் பட்டார்கள்.

## தேவ மக்கள் பிறதெய்வங்களை புறக்கணிப்பர்

தானியேல் 3:17, 18

நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும் இராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற் போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வது மில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை என்கிறது இராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக் கடவது.

## அந்திக் கிறிஸ்து : கீழ்ப்படி அல்லது சாவு

வெளி 13:16-18

அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள் இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது, அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாத படிக்கும் செய்தது. இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக் கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு. [666] .

## இரட்சிக்கப்பட்டவர்களுக்கு நன்மையான நாட்கள் வரும்

இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந் தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டி யானவருடைய (இயேசுகிறிஸ்துவின்) இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்.; சிங்காசனத்தின் மேல் வீற்றிருக் கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனிப் பசியடைவதுமில்லை. இனிதாகமடைவது மில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள் மேல் படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக் குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார். வெளி 7:14-17

**நிறைந்த வயிற்றோடு நரகம் செல்வதைக் காட்டிலும், பசியுடன் பரலோகம் செல்வதே மேல்**

# அந்திக்கிறிஸ்துவை ஆராதிப்பவர் யாவரும் அழிவர்

**விற்கவும் வாங்கவும் அந்திகிறிஸ்துவின் முத்திரையைத் தன் சரீரத்தில் குறித்துக் கொள்ளுகிற யாவரும் அழிவர்**

வெளி 14:9-13

மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது, தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக் கொள்கிறவனெவனோ அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக் குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்.

அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத்தரித்துக் கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது.

தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும் என்று கூறினான். பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது, கர்த்தருக்குள் மரித்திருக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது. அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழித்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று.

# தேவ கோபாக்கினை உலகிற்குவருமுன் சாத்தான் இட்ட முத்திரை, இலக்கத்தின் மேல் வெற்றி

வெளி 15:1-3, 16:1

ஏழு வாதைகளுடைய ஏழு தூதரைக்கண்டேன், அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது. அன்றியும், அக்கினி கலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடலையும் மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங் களைப் பிடித்துக் கொண்டு அந்தக் கண்ணாடி கடலருகே நிற்கிறதையும் கண்டேன். அவர்கள் தேவனுடைய ஊழியக் காரராகிய மோசேயின் பாட்டையும், ஆட்டுக் குட்டியானவரின் பாட்டையும் பாடி, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான் களின் இராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமுள்ளவைகள் ... அப்பொழுது தேவாலயத்திலி ருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் அந்த ஏழு தூதருடனே நீங்கள் போய்த் தேவனுடைய கோபகலசங் களைப் பூமியின் மேல் ஊற்றுங்கள் என்று சொல்லக் கேட்டேன்.

## மரித்த இரத்த சாட்சிகளே ஆளுவர்

இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப் பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும் மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துடனே கூட ஆயிரம் ஆண்டுகள் அரசாண்டார்கள். வெளி 20:4

# அர்மகெதோன் - கிறிஸ்து நிறுத்தும் போர்

**பிசாசு தேசங்களை போருக்காக கூட்டுகிறான்**

வெளி 16:14,16

அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள் அவைகள் பூலோகமெங்குமுள்ள இராஜாக்களைச் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது .... அப்பொழுது எபிரேயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச்சேர்த்தான்.

**கிறிஸ்து தாம் தெரிந்துக் கொண்ட ஜாதியையும் தேசத்தையும் விடுவிக்கிறார்**

சகரியா 12:2, 3; 14:3, 12

இதோ, சுற்றிலும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் நான் எருசலேமைத் தத்தளிப்பின் பாத்திரமாக்குகிறேன்; அந்நாளிலே நான் எருசலேமைச் சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன்; அதைக் கிளப்புகிற யாவரும் சிதைக்கப்படுவார்கள்; பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு விரோதமாய்க் கூடிக் கொள்வார்கள்...
கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவது போல் அந்த ஜாதிகளோடே போராடுவார்... எருசலேமுக்கு விரோதமாக யுத்தம் பண்ணின எல்லா ஜனங்களையும் கர்த்தர் வாதிக்கும் வாதையாவது; அவர்கள் காலூன்றி நிற்கையிலும் அவர்களுடைய சதை அழிந்து போகும்; அவர்கள் கண்கள் தங்கள் குழிகளிலே கெட்டுப்போகும்; அவர்கள் நாவு அவர்கள் வாயிலே அழுகிப்போகும்.

**தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? - ரோமர் 8:31**

# கடைசியில் உலகை ஆளுகிறவர் - கிறிஸ்துவே

ரோமர் 1:18

சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

வெளி 19:15, 16

புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இரும்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார். **இராஜாதி இராஜா கர்த்தாதி கர்த்தா** என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது.

**அந்திகிறிஸ்து சில ஆண்டுகளே ஆளுவான், கிறிஸ்து இவ்வுலகில் 1000 ஆண்டுகள் அரசாளுவார், பின்பு அவர் நித்தியமாக அரசாளுவார்**

இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடே கூட ஆயிரம் வருடம் அரசாளுவார்கள். வெளி 20:6

அந்த இராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார். தானியேல் 2:44

**எல்லா தேசத்தாரும் கர்த்தராகிய கிறிஸ்துவை ஆராதிப்பர்**

ஆண்டவரே, நீர் உண்டாக்கின எல்லா ஜாதிகளும் வந்து, உமக்கு முன்பாகப் பணிந்து, உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள். சங்கீதம் 86:9

## சாத்தான் தேவனோடு கொண்ட போரில் தோற்றுப்போவான்

வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும் யுத்தம் பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற் போயிற்று. உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத் தள்ளப்பட்டது, அதனோடே கூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய இராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது: இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ் சுமத்தும் பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான். வெளி 12:7-10

### இந்தப்போரில் வெற்றி தரும் ஆயுதங்கள்

மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்கு தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரதத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள். வெளி 12:11

### சாத்தானின் நித்திய முடிவு

வெளி 20;9, 10

அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது. மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்க தரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும்பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்.

# நித்திய ஆட்சி யாருடையது?

## கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்றென்றும் ஆட்சி செய்கிறார்

*1 நாளாகமம் 29:11*

*கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்.*

*1 கொரிந்தியர் 15:22-26*

*ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அதன் பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு இராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்கு கீழாக்கிப் போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்.*

*வெளி. 11:15*

*ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் இராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் அரசாளுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின.*

## சாத்தானும் பிசாசுகளும் உன் விரோதிகள்

**காமம், புணர்ச்சிகள், கரு சிதைத்தல், பிசாசு பிடித்தல் இவைகள் மூலமாக சாத்தான் சரீரத்தையும் ஆத்துமாவையும் கெடுக்கிறான்.**

... ஆண்களும்... ஒருவர் மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி ....தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனை அடைந்தார்கள். ரோமர் 1:27

நீதிமொழிகள் 6:16, 17

...காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார்,... குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்தும் கை

மத்தேயு 12:45

திரும்பிப்போய் தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டு வந்து உட்புகுந்து அங்கே குடியிருக்கும். அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலமை அதிக கேடுள்ளதாயிருக்கும்.

(ஜீவனுள்ள தேவனை மட்டும் தேடு. வரும் காலத்தை கணிக்க, மனநிலையை வாசிக்க, சரீர சுகம் பெற வேறொரு தேவனை நோக்கிக் கூப்பிடாதே.

தேவனுக்கு விரோதி சாத்தான். அவன் இப்படிப்பட்டவைகளுக்குப்பின் நிற்கிறான். மனிதர்கள், புத்தகங்கள், பொருட்கள், மதங்கள் இவைகள் மூலமாக அவன் கிரியை செய்கிறான். அவனுடைய செயல்கள் முதலில் அதிசயம் போல் காணப்பட்டாலும், பின்பு கொடூரமான அடிமைத் தனத்திற்குள் உன்னைச் சிக்க வைக்கும். கிறிஸ்து ஒருவரே உன்னை விடுவிக்கக் கூடியவர்.)

**மன்னிப்பு, சுத்திகரிப்பு, கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தின் மூலமாக உள்ள மீட்பு முதலியவைகளுக்கு மாறாக போதிக்கும் போதனைகள் யாவும் தவறானவைகளும் ஏமாற்றுக் குரியவைகளும் ஆகும்**

மத்தேயு 24:4, 5, 11

இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சிக்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக் கொண்டு நானே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள். அநேகங் கள்ளத்தீர்க்க தரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

பிலிப்பியர் 3:18,19

ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன். அவர்களுடைய முடிவு அழிவு அவர்களுடைய தேவன் வயிறு,...

**மன்னித்து, மன்னிப்பைப் பெற்றுக்கொள்**

மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மத்தேயு 6:14

**கிறிஸ்து இயேசுவின் விலையேறப்பட்ட இரத்தத்தில் மீட்பு உண்டு**

1 பேதுரு 1:18, 19, 21

...அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன் மேல் இருக்கட்டும்.

## நான் பாவ பிரமாணத்திற்கு உட்பட்டவன்

*நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப் போல உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப் போல எங்களை அடித்துக் கொண்டு போகிறது. ஏசாயா 64:6*

## கீழ்ப்படியாதவர் மேல் வரும் தேவ கோபாக்கினை

*அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து பாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாகயிருந்தோம். எபேசியர் 2:2,3*

## இரட்சிக்கப்படாதவர்கள் மேல் சாத்தான் ஆதிக்கம் கொள்ளுகிறான்

*எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப் போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். 2 கொரிந்தியர் 4:3,4*

## கிறிஸ்துவில் உண்டான வெற்றி

*ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு தீர்ப்பில்லை. ரோமர் 8:1*

## இரட்சிக்கப்படாதவர்கள் சாத்தானுக்கு சொந்தமானவர்கள்

மத்தேயு 13:38

நிலம் உலகம்: நல்லவிதை இராஜ்யத்தின் புத்திரர்; களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்.

நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின் படி செய்ய மனதாயிருக்கிறீர்கள். யோவான் 8:44

## ஆதாமுக்குள் நாம் தேவனுக்கு விரோதமாய் முறட்டாட்டம் பண்ணினோம்

மத்தேயு 12:30

என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான். என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.

## இதனால் தான் கிறிஸ்துவின் ஆவியினால் நாம் மறுபடியும் பிறக்க வேண்டும்

2 கொரிந்தியர் 5:17

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின.

என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். யோவான் 10:27,28

## இப்பொழுதே ஆண்டவராகிய இயேசுவுக்கு உன்னை ஒப்புக்கொடு

இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள். 2 கொரிந்தியர் 6:2

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1 யோவான் 1:9

## கிறிஸ்துவில் நாம் பெறும் நித்தியமான வெற்றி

*ரோமர் 8:36, 37*

*கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.*

*தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். 1 யோவான் 5:4*

## ஜெயம் கொள்ளுகிறவர்கள் பெறும் வெகுமதி

*ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளு கிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்த கல்லின் மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிற வனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தை கொடுப்பேன். வெளி 2:17*

*ஜெயங்கொண்டு முடிவு பரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றது போல, ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுப்பேன். வெளி. 2:26*

## நீ தேவனுக்கு முக்கியமானவன். கிறிஸ்துவின் சிலுவை மரணம் அதை நிரூபிக்கிறது. உனக்கு தேவன் மிகவும் முக்கியமானவர்

*எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. 2 கொரிந்தியர் 3:5*

# யாரை சேவிப்பீர்கள் என்று இன்று தீர்மானியுங்கள்

## மகிமையில் கிறிஸ்துவுடன் காணப்படுவீர்கள்

நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையில் வெளிப்படுவீர்கள். ஆகையால் விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரக ஆராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள். இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வரும். கொலோசெயர் 3:1, 2, 4-6.

## அல்லது சாத்தானோடு என்றென்றும் சபிக்கப்பட்டவராக இருப்பீர்

அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். என்றார். மத்தேயு 25:41

துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள். சங்கீதம் 9:17.

உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப் போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப் பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். மாற்கு 9:43

## உன்னையே தாழ்த்து

இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக இராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான். மத்தேயு 18:2-4

## பாவத்திற்கு மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பு

யோவான் வனாந்தரத்தில் ஞானஸ்நானங் கொடுத்து, பாவ மன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தான். யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவில் வந்து, தேவனுடைய இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து : காலம் நிறைவேறிற்று, தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார். மாற்கு 1:4, 14, 15

அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்கிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள். லூக்கா 13:3

அப்போஸ்தலர் 3:19,20

ஆனபடியினாலே, கர்த்தருடைய சந்நிதானத்தில் இருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்.

## இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உன் இரட்சகராக அங்கீகரித்துக்கொள்

### உன்னையே கிறிஸ்து இயேசுவுக்கு ஒப்புக்கொடு

உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார். சங்கீதம் 37:5

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3:16

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைவிசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். அப்போஸ்தலர் 16:31.

### தம் புத்திரர்களாய் இருக்கும்படியான வல்லமையை தேவன் கொடுக்கிறார்.

அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய், அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைப் பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.... சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன். யோவான் 1:2, 14:27

### வெளியரங்கமாய் கிறிஸ்துவை உன் நாவினால் அறிக்கைசெய்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. ரோமர் 10:9-11.

Read booklets online or by App
www.wmp-readonline.org

**Free — not to be sold**

www.wmpress.org 5-21 1415/2 Tamil SVC